# டாக்டர் தேவயானி கோப்ராகடேவிற்கு தூதுவர் விலக்களிப்பு

ஜனவரி 10, 2014

நியூ யார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இந்திய நிரந்தர இயக்கத்தின் அறிவுரையாளரன டாக்டர் தேவயானி கோப்ராகடேவிற்கு 2014 ஜனவரி 8ந்தேதி தூதுவர் விலக்களிப்புகள் மற்றும் பிற சலுகைகள், ஐக்கிய நாடுகள் மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான தலைமையகங்கள் ஒப்பந்த்த்தின் 15வது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது. அதே நேரத்தில் அமெரிக்க அரசு, இந்திய அரசை அறிவுரையாளர் கோப்ராகடேவிற்கான விலக்களிப்பினை விலக்குமாறு கேட்டுக்கொண்டது.

2014 ஜனவரி 9ந்தேதி இந்திய அரசு அமெரிக்க அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்தது. அறிவுரையாளர் கோப்ராகடேயை புது தில்லியில் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு இடமாற்றம் செய்து உத்தரவிட்டது.

இந்தியாவிற்கு கிளம்புகையில் அறிவுரையாளர் கோப்ராகடே தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து தன்னை குற்றமற்றவர் என்றும் வலியுறுத்தினார். இந்த காலகட்டத்தில் இந்திய அரசு, குறிப்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் ம்ற்றும் இந்திய மக்கள் மற்றும் ஊடகங்கள் அவருக்கு வழங்கிய வலுவான மற்றும் நீடித்த ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

இந்த சம்பவம் தனது குடும்பத்தில் பாதிப்பினை ஏற்படுத்தாது என்று உறுதியாக நம்புவதாகவும் அவர் கூறினார். குறிப்பாக இன்னமும் அமெரிக்காவில் உள்ள தனது குழந்தைகளை பாதிக்காது என்று நம்புவதாக தெரிவித்தார்.

**புது தில்லி**
**ஜனவரி 10, 2014**